செய்யப்படுகின்றார்கள். Computer Science என்பது சிறிய படிப்பாக இருக்கின்ற காரணத்தால், அதைப் படிப்பவர்களுக்கு தகுதித் தேர்வில் வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதிலே முதுநிலை பாடத் திட்டங்கள் வருகின்றபோது, அந்த வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்தினை, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பாடத் திட்டத்தை இணையதளம் வழியாக மாற்றியமைக்க, அரசு உரிய நடவடிக்கையை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 305, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

305—

பகுதிநேர நியாய விலைக் கடை

***13100—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, லிங்கமாவூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட, வெங்கிட்டாபுரம் என்ற ஊரில், சின்னகுமாரபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் நடத்தும் லிங்கமாவூர் முழுநேர நியாய விலைக் கடை 291 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் லிங்கமாவூர் கிராமத்தைச் சேர்ந்த 175 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த லிங்கமாவூர் கிராமத்தைச் சேர்ந்த 175 குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய்க் கடையில் 116 குடும்ப

அட்டைகளே எஞ்சியிருக்கும். மேலும், தாய்க் கடைக்கும் பகுதிநேர கடை அமைக்கக் கோரும் லிங்கமாலூர் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் ஒன்றேகால் கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசு நிபந்தனைகள் எதுவுமே பூர்த்தியாகாத நிலையில், லிங்கமாலூர் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்ததற்கும், அதோடு மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டை ஒன்றியத்தில் இளைஞர் தொழிற்கல்வி பயின்று வேலைவாய்ப்புப் பெற்று பயனடையும் வகையில், புதிய அரசு ஐ.டி.ஐ. ரூ.8.75 கோடியில் அமைத்துக் கொடுத்ததற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பிலும், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பிலும் என்னுடைய நன்றியை அன்போடு கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜல்லிப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட லிங்கமாலூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே லிங்கமாலூர், வெங்கிட்டாபுரம் ஆகிய இரண்டு கிராமங்களை உள்ளடக்கிய வெங்கிட்டாபுரத்தில், லிங்கமாலூர் நியாய விலைக் கடை என்ற பெயரிலே முழுநேரக் தாய்க்கடையானது இயங்கி வருகிறது. லிங்கமாலூரில் பகுதிநேரக் கடை வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரிடம்

கேட்கின்றேன். ஏற்கெனவே ஜல்லிப்பட்டியிலே, ஜல்லிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குட்பட்ட 2 கடைகள் உள்ளன. அங்குள்ள ஒரு கடையிலே, மலைவாழ் பகுதி மக்கள் வசிக்கக்கூடிய ஈசல்திட்டு என்ற பகுதியிலே இருந்து 50 ரேஷன் கார்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அந்த ஈசல்திட்டுக்கும் ஜல்லிப்பட்டிக்கும் இடையே 10 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. எனவே, ஈசல்திட்டிலிருந்து லிங்கமாவூர், வெங்கிட்டாபுரம் தாண்டி ஜல்லிப்பட்டிக்குச் செல்லவேண்டும். ஆகவே, புதியதாக லிங்கமாவூரிலே ஒரு பகுதிநேரக் கடையை அமைக்கும்போது, அந்த லிங்கமாவூரிலே இருக்கக்கூடிய 175 குடும்ப அட்டைகளோடு, ஈசல்திட்டிலே இருக்கக்கூடிய மலைவாழ் மக்களுடைய 55 குடும்ப அட்டைகளையும் இணைத்து அங்கே ஒரு பகுதிநேரக் கடையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 809 முழுநேர நியாய விலை அங்காடிகள் மற்றும் 285 பகுதிநேர அங்காடிகளில், 69 முழுநேர அங்காடிகளும், 61 பகுதிநேர அங்காடிகளும், ஒரு நடமாடும் அங்காடியும் என மொத்தம் 131 அங்காடிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், உடுமலைப்பேட்டை வட்டம், ஈசல்திட்டு என்ற கிராமத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) திட்டத்தின்கீழ் 51 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, தற்சமயம் ஜல்லிப்பட்டி என்ற இடத்தில் அமைந்துள்ள நியாய விலை அங்காடியில் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்று வருகின்றனர். இவர்கள் வசிக்கும் இடத்திற்கும், நியாய விலைக் கடைகள் இருக்கும்

இடத்திற்கும் இடைப்பட்ட தூரம் அதிகமாக இருப்பதால், அருகில் அமைந்துள்ள லிங்கமாவூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்து, பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்திடவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அந்தப் பகுதி மக்களும் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறார்கள். நேற்றையதினம்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலைவாழ் பகுதிகளில் வாழ்கிறவர்களுடைய பள்ளிக் குழந்தைகளுக்கு மழைக் காலத்தில் அணிய ரெயின்கோட்டும், அதேபோல, குளிர்காலத்தில் அணிய கம்பளிச் சட்டையும் வழங்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மலைவாழ் பகுதி மக்களுடைய வாழ்க்கையில், அவர்களுடைய முன்னேற்றத்தில் என்றைக்கும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியின் தேவை குறித்துப் பரிசிலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எங்களுடைய பகுதியில், 18 செட்டில்மென்ட் என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கு வசிக்கக்கூடிய மலைவாழ் மக்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படவேண்டும். ஆனால், இதுவரை 10 லிட்டர் வழங்கப்படவில்லை. ஒரு குடும்ப அட்டைக்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய்தான் வழங்கப்படுகிறது. மத்திய அரசு மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டைக் குறைத்தாலும்கூட, அங்கு மலைவாழ் மக்களுக்கு எந்த வசதியும் இல்லாத காரணத்தால், அவர்களுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா

அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறியாதது அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே 56,802 கிலோ லிட்டராக இருந்த மத்திய அரசினுடைய மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டை, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கடந்த தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் அரசு 10 முறை படிப்படியாகத் தொடர்ந்து குறைத்திருக்கிறது. இப்போது வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டின் அளவு 29 ஆயிரத்து 60 கிலோ லிட்டர். அதாவது, தமிழக மக்களுடைய தேவையில் வெறும் 45% அளவிற்குத்தான், மத்திய அரசு மண்ணெண்ணெயை வழங்கிக்கொண்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையிலும், ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முன்னுரிமை அடிப்படையில், ஏழையெளிய மக்களுக்கும், மலைப் பகுதிகளில் வாழ்கிறவர்களுக்கும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்வதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதி, முகையூர் வட்டாரத்திற்குட்பட்ட ஆயந்தூர் ஊராட்சி, R.C. பகுதியில் வசிக்கின்ற ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்காக கடந்த 2009 ஆம் ஆண்டு முந்தைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு, திறப்பு விழா நடத்தப்பட்டு, அன்றைக்கு மட்டுமே அந்தக் கடை திறக்கப்பட்டது. அன்று முதல் இதுவரை 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தக் கடை இதுவரைக்கும் மூடப்பட்டிருக்கிறது. எனவே, அதை மீண்டும் திறந்து, அந்தப் பகுதி

மக்களுக்கு அனைத்துப் பொருட்களும் கிடைக்கின்ற வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து இதுவரை அரசின் கவனத்திற்கு கருத்துரு ஏதும் வரப்பெறவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கருத்துரு பெற்று, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, பக்தவத்சலம் காலனி, 8—வது சாலையில் என்னுடைய தொகுதி நிதியை ஒதுக்கி, நியாய விலைக் கடைக்காக கட்டடமும் கட்டிக் கொடுத்து, மாநகராட்சி மற்றும் சிவில் சப்ளைஸ்—க்கும் எழுதப்பட்டுவிட்டது. ஆனால், அங்கே நியாய விலைக் கடையை ஆரம்பிப்பதற்கு நியாயமற்ற தாமதத்தைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். அதனால் மக்கள் அவதிப்படுகின்றனர். உடனே, அந்தக் கடையை சிவில் சப்ளைஸ் எடுத்து கார்டுகளை புதிய கடைக்கு மாற்றிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதேபோல், நம்முடைய மாநில அரசு தன்னுடைய நிதியை ஒதுக்கி, குறிப்பாக, மலைவாழ் மக்களுக்காவது கூடுதலாக மண்ணெண்ணெயை வழங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம்*

மூலமாகவும், பாரத பிரதமர் அவர்களை நேரில் சந்தித்தும், தமிழகத்தில் ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகிற மண்ணெண்ணெயை, 65,140 கிலோ லிட்டர் அளவிற்கு வழங்கிட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற வகையில், அவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மண்ணெண்ணெயை வழங்கிடவேண்டும் என்ற உத்தரவையும் வழங்கியிருக்கிறார்கள். அதனடிப்படையில்தான் கிராமப்புறங்களில் இருக்கிற சாதாரண மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன, புதிதாகக் கட்டப்பட்டுள்ள கடையில் ஆய்வு செய்யப்பட்டு, அப்படி வேலை முடிந்திருக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாக அந்தக் கடை திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட, கோட்டாக்குடி பஞ்சாயத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய கார்காவயல் பகுதியிலே ஆதி திராவிட மக்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் தங்களுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அதை நிறைவேற்றித் தர முன்வந்தால், அதற்கான கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கித் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் தமிழகத்தில் மட்டும்தான் 585 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை செயல்படுகிறது. அத்தகைய மிகப் பெரிய ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்து கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 306, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

306—

தொழில் பூங்கா

***41501—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் தோல் மற்றும் தோல் பொருட்களுக்கான தொழில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூரில் தோல் மற்றும் தோல் பொருட்களுக்கான தொழிற்பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் வாலாஜா வட்டம் அருகிலே இருக்கிறது. அங்கே புதிதாக 973 ஏக்கரில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இராணிப்பேட்டை பகுதி—4 தொழிற்பூங்காவினை அமைக்கவிருக்கின்றது. அதில் தகுந்த